**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.33/2018**

Date: 12.11.2025.

பி.வா.சா.1 - திரு. பெனுபிரேம்குமார்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவை. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை நான் படித்து பார்த்தேன். வழக்கரையில் 2 பட்டிகை சொத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் 3 பட்டிகை சொத்துகள் தரப்பட்டுள்ளன என்றால், சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்துகளின் பழைய சர்வே எண்கள். 7106, 7107 ஆகும். பழைய சர்வே எண். 7106 ல் 30.5 + 30.5 ஆக மொத்தம் 61 சென்டுகள் மற்றும் பழைய சர்வே எண். 7107 ல் 21 சென்டு. அவற்றிற்கான ரீசர்வே எண்கள் 7106 க்கு 779/8 , 779/9 , 7107 க்கு 779/6 ரீசர்வே எண்ணாகும். வழக்கு பட்டிகை சொத்து ஆதியில் 1ம் பிரதிவாதி கிருஷ்ணஆசாரியின் தகப்பனார் சுப்பிரமணிய ஆசாரிக்கு பாத்தியப்பட்டது. வழக்கு பட்டிகை சொத்தானது விவசாய நிலம், வீட்டு மனை கிடையாது. வாதி தரப்பு ஆவணங்களை நான் படித்து பார்த்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–4 01.09.1979 தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் ஆகும் என்றால், சரிதான். அ.வ.எண்.67/65 மற்றும் அ.வ.எண்.249/1966 வழக்குகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ–4 ல் வழக்கு சொத்துகள் தற்போது 1ம் பிரதிவாதி கிருஷ்ண ஆசாரியின் கைவசம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வாசா.ஆ–2 ல் புகார்தாரர் மணவாளகுறிச்சியை சேர்ந்த முகுந்தன், அவர் முத்துநாயகம் என்பவர் மேல் புகார் கொடுத்திருக்கிறார். பி.வா.சா.ஆ–2 ல் முத்துநாயகம் 1ம் பிரவாதி கிருஷ்ணஆசாரிக்கு நண்பர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ–4 ல் ன் படி இந்த வழக்கின் கூடுதல் 9 வது பிரதிவாதி , சி.சி.393/2003 வழக்கின் 2 வது குற்றவாளியாக

சேர்க்கப்பட்டுள்ளார் என்றால், சரிதான். அது மண்டைகாடு காவல் நிலையத்திற்கு உட்பட்ட அழகன்பாறை கூட்டுறவு வங்கியை கொள்ளையடித்த வழக்கு என்றால், சரிதான். அந்த வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–14 ஆனது அ.வ.எண்.249/1966 வழங்கப்பட்ட தீர்ப்பு என்றால், சரிதான். அதில் வாதி சுப்பிரமணியம் ஆசாரி. அந்த வழக்கின் 37 வது பிரதிவாதி பொன்னையன் நாடார். அந்த பொன்னையன் நாடார் , இந்த வழக்கின் 9 ம் பிரதிவாதியின் தகப்பனார் ஆவார் என்றால், சரிதான். வா.சா.ஆ–14 ல் 37 வது பக்கத்தில், ' பொன்னையன் நாடாருக்கு பழைய சர்வே எண்.7106 மற்றும் 7107 ல் உரிமையில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். பழைய சர்வே எண் 7108 மட்டும் தான் உரிமையுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–3 இ.பி எண்.12/1973 ஆகும். அதில் முத்து நாயகம் 2 வது சாட்சி என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–9 ல் அ.வ.எண்.678/1105 ME யில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரை என்றால், சரிதான். அதிலும் 9 ம் பிரதிவாதியின் தாத்தா பீமன் என்ற வேதமாணிக்கத்திற்கு உரிமையில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வாதியின் உரிமை முறையான ஆவணங்களால் காட்டப்பட்டுள்ளது என்றாலும், நான் உண்மைக்கு புறம்பாக எதிர்வழக்கு செய்கிறோம் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.